

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 08-07-2024

# உ.பி.யில் நடந்தால்...

கள்ளக்குறிச்சியில் ஒரு சம்பவம் நடந்ததும் நட்டா அதனை இந்தியப் பிரச்சினையாக ஆக்கினார். ‘காங்கிரஸ் கட்சி என்ன செய்கிறது? ஏன் மவுனமாக இருக்கிறது?’ என்று கேட்டார். ஆனால், உ.பி.யில் 121 பேர் நெரிசலில் சிக்கி பரிதாபமாக பலியாகி இருப்பது நட்டா கண்ணுக்கு ஏன் தெரியவில்லை?

**நிர்மலா சீதாராமன், கள்ளக்குறிச்சி பிரச்சினையை வைத்து அரசியல் முழக்கங்கள் செய்தாரே? உ.பி.யில் இறந்தவர்களுக்காகக் கண்ணீர் விட்டாரா?**

**நடந்தது உத்தரப்பிரதேசம். அதனால் உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பள்ளம் ஏற்பட்டு விட்டது. அதைப் பற்றியே பேசவில்லை.**

உத்தரப்பிரதேசத்தில் நடந்தது இந்தியாவையே கண்ணீரில் மிதக்க வைக்கும் மாபெரும் பேரழிவு அல்லவா? உத்தரப் பிரதேசத்தையே அமைதியாக மாற்றிவிட்டதாகச் சொல்கிறார்களே, யோகி! எங்கே போனார் யோகி? மக்களைக் காப்பாற்றாமல் எங்கே இருந்தார்? லட்சக்கணக்கான மக்கள் கூடும் இடத்தில் காவல் துறை இருந்ததா? இத்தனை மனித உயிர்கள் இழப்புக்கு காரணமான போலே பாபா கைது செய்யப்பட்டாரா? இல்லை! எங்கே போனார்? தலைமறைவாகி விட்டார். தலைமறைவு ஆக்கப்பட்டார். ஒப்புக்கு 6 பேரைக் கைது செய்துள்ளார்கள். அவ்வளவுதான். நிகழ்ச்சியின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் கைது செய்யப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையில் பாபா பெயரே இல்லை.

உத்தரப்பிரதேச மாநிலம், ஹாத்ரஸ் மாவட்டம், சிக்கந்தராவ் தாலுகா, முகல்வடி கிராமத்தில் போலே பாபாவின் ஆன்மிகக் கூட்டம் நடந்துள்ளது. ரகசியமாக நடந்த கூட்டமல்ல இது. ‘விஷ்வ ஹரி’ என அழைக்கப்படும் போலே பாபா வருகிறார் என்று ஊர் முழுக்க சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன. ‘மானவ் மங்கள் மிலான்’ என்ற இந்த வழிபாட்டு நிகழ்ச்சியை ‘மானவ் மங்கள் மிலான் சத்பவன சம்மேளன சமிதி’ என்ற அமைப்பு ஒருங்கிணைத்துள்ளது. ஆறு பேர்கள் கொண்ட குழுவாம் இது. இப்படி ஒரு சம்பவம் நடந்ததும் இந்த ஆறு பேரின் எண்களும் அணைத்து வைக்கப்பட்டு விட்டன. எந்த மாதிரியான ரகங்கள் இவர்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

**இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். அனுமதி கோரும் போது, சுமார் 80,000 பேர் இந்த வழிபாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள் என்று ஏற்பாட்டாளர்கள், காவல் துறையிடம் சொன்னதாகச் சொல்கிறார்கள். வந்தவர்கள் இரண்டரை லட்சம் பேர். ஏன் உரிய பாதுகாப்பை உ.பி. பா.ஜ.க. அரசு தரவில்லை.**

நிகழ்ச்சி முடிந்தபிறகு, போலே பாபாவின் கால் மண்ணை சேகரிக்க மக்களிடையே ஏற்பட்ட போட்டியே இந்த கூட்ட நெரிசலுக்குக் காரணம் என்கிறார்கள். நெரிசலில் சிக்கி கீழே விழுந்தவர்களால் எழ முடியாத அளவுக்கு கூட்டம் இருந்துள்ளது.

போலே பாபா கடந்து செல்ல தனிப் பாதை அமைக்கப்பட்டது. அவரை தரிசனம் செய்வதற்காகப் பல பெண்கள் அவருக்கு அருகில் நின்றுகொண்டிருந்தனர்.

வழிபாடு, சொற்பொழிவு முடிந்த பிறகு, நிகழ்ச்சி நடந்த இடத்தை ஒட்டியுள்ள நெடுஞ்சாலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்தது. ‘போலே பாபா’ தனது வாகனத்தை நோக்கிச் சென்றபோது, அதிக கூட்டத்தால் நெரிசல் ஏற்பட்டுள்ளது. காப்பாற்ற வழியில்லாமல் கண்ணுக்கு முன்னால் பலரும் இறந்துள்ளார்கள். “நான் நான்கு மணிக்கு இங்கு வந்தேன். எங்கும் சடலங்கள் இருந்தன. ஒரு பெண் சுவாசித்துக் கொண்டிருந்தார். ஆனால் சிகிச்சை கிடைக்காததால் என் கண்முன்னே இறந்துவிட்டார்” என்று பத்திரிகையாளர் ஒருவர் சொல்லி இருக்கிறார்.

இந்த போலே பாபா, பலே ஆசாமியாகத் தெரிகிறார். இறந்த பெண்ணை உயிர்த்தெழச் செய்வதாகக் கூறி மோசடி செய்ததாக அவர் மீது வழக்கு இருப்பதாக ‘இந்து தமிழ் திசை’ செய்திக் கட்டுரை வெளியிட்டு இருக்கிறது. போலே பாபாவின் இயற்பெயர் சூரஜ் பால் ஜாதவ். உத்தரப்பிரதேச காவல்துறையில் காவலராக இருந்துள்ளார். 1997 ஆம் ஆண்டு பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதாகி ஆக்ரா சிறையில் அடைக்கப்பட்டு இருந்துள்ளார். பின்னர் விடுதலை ஆகி இருக்கிறார். இதன்பிறகு பணி நீக்கம் செய்யப்பட்டார். இதன்பிறகு தனது பெயரை, ‘சாக்கா விஷ்வ ஹரி போலே பாபா’ என மாற்றிக் கொண்டார். காஸ்கன்ச்சில் ஆசிரமம் தொடங்கினார். இவரது பேச்சுக்கு கூட்டம் கூடத் தொடங்கியது. அதன் பிறகு அவரைப் பற்றிச் சொல்வது எல்லாம் திகில் கதையைப் போல இருக்கிறது.

**“பாபா ஆனபிறகு ஆக்ராவில் 2000 ஆம் ஆண்டில் ஒரு கூட்டம் நடத்தினார். இதில் உடல்நலம் குன்றி இறந்ததாக தனது வளர்ப்பு பெண்ணை வைத்து கூட்டத்தில் பிரார்த்தனை செய்துள்ளார். தன் மகிமையால் அப்பெண் உயிர்த்தெழுந்ததாக பொதுமக்களை நம்ப வைத்துள்ளார். பிறகு அப்பெண்ணை ஆக்ராவில் ஒரு சுடுகாட்டில் எரிக்க முயன்றபோது பிடிபட்டுள்ளார். பாபாவுடன் சேர்த்து 7 பேரை ஆக்ரா போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். பிறகு இந்த வழக்கிலும் ஆதாரங்கள் இல்லை என பாபா விடுவிக்கப்பட்டுள்ளார்”** என்கிறது ‘இந்து தமிழ் திசை’ நாளிதழ்.

பிச்சுவாவில் அமைந்துள்ள மைன்புரி ஆசிரமத்தில்தான் போலே பாபா வசித்து வருகிறார். 13 ஏக்கர் நிலத்தில் பரந்து விரிந்து உள்ள இந்த ஆசிரமத்திற்கு ஹரி நகர் என்று பெயரிட்டார். இந்த பாபாவுக்கு மாநிலம் முழுக்க 24 ஆசிரமங்கள் உள்ளன.

**போலே பாபா மீது ஆக்ரா, எரவாடா, காஸ்கஞ்ச், பரூக்காபாத் ஆகிய இடங்களிலும் ராஜஸ்தான் மாநிலத்திலும் பல்வேறு வழக்குகள் உள்ளன. ஆனாலும் அவர் நாட்டு மக்களுக்கு சொற்பொழிவுகள் நடத்திக் கொண்டு தான் இருக்கிறார். 121 பேர் மரணத்துக்கு காரணமானவர், சில நாட்களில் மறக்கப்படுவார். மீண்டும் இதே சொற்பொழிவுகளைத் தொடங்கியும் விடுவார். அவரெல்லாம் உலகின் பார்வையில் குற்றம் சாட்டப்படுபவராக பார்க்கப்பட மாட்டார். அப்படி பார்த்தால் ‘பாவம்’.**

**‘இறந்தவர்கள்’ பாவம் ஆக மாட்டார்கள். ஏனென்றால், இந்த சமூகத்தில் நடக்கும் இடத்தைப் பொறுத்து நீதியும், தீர்ப்பும் மாறிவிடும்.**

••

## தமிழ் நாட்டில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூன் 8–

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று (08.07.2024) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

09.07.2024 முதல் 12.07.2024 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

13.07.2024: தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு: வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் மாலை மற்றும் இரவு வேளையில், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35–36 செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27–28 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் மாலை மற்றும் இரவு வேளையில், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 செல்சியஸை ஒட்டியும். குறைந்தபட்ச வெப்பநிலை 27–28’ செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.





சட்டமன்ற விழுப்புரம் தெற்கு மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி தலைமைத் தேர்தல் பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்தில் உயர்கல்வி துறை அமைச்சர் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்கள். மண்டலச் செயலாளர் அ.தமிழ்மாறன் மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப.அன்பரசு ஆகியோர் வரவேற்புரையாற்றினார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், தகவல் தொழில்நுட்ப அணி மாநில ஆலோசகர் கோவி.லெனின், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர்கள் ஆ.கா. தருண், இசை சிவா, பாலா, பத்மபிரியா, மண்டல பொறுப்பாளர் .ஸ்ரீதர், காஞ்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரவி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் சாம்பசிவம், பாலாஜி , கிருஷ்ணராஜ், சசிரேகா, பிரபு, இராம சரவணன், தொகுதி அமைப்பாளர்கள் ரகுபதி, கதிரவன், தேவா, நாராயணமூர்த்தி, விஜயகுமார், குரு இராமலிங்கம், வீர மணிகண்டன், மகாலட்சுமி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர். கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### சாதி – மத பாகுபாடுகள் இல்லாமல்

# அனைத்து மக்களையும் நேசிக்கக் கூடியவர்களாக இருப்போம்!

## தூத்துக்குடியில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தூத்துக்குடி, ஜுலை 8-

நாம் சாதி, மத பாகுபாடுகளில் இருந்து வெளியே வந்து அனைத்து மக்களையும் நேசிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறினார்.

தூத்துக்குடி மாவட்டம் கீழவல்லநாட்டில் உள்ள தூத்துக்குடி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மாவட்ட ஆட்சித் தலைவர் கோ.லட்சுமி பதி தலைமையில் நேற்று முன் தினம் (06.07.2024) பார்வையிட்டு ஆய்வு செய்து மாணவ - மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் கனிமொழி கருணாநிதி மாணவர்களிடம் தெரிவித்ததாவது:-

உங்களுக்கு எந்தத் துறை பிடித்திருக்கிறதோ அந்தத் துறையை தேர்ந்தெடுங்கள். அந்த துறைதான் உங்கள் வாழ்க்கை முழுவதும் உங்களோடு வரப்போகிறது. பிடித்த துறையில்தான் நமக்குப் பிடித்த விஷயத்தை மகிழ்ச்சியோடு செய்ய முடியும். மற்றவர்களை பார்த்து துறையை தேர்ந்தெடுத்தால் மகிழ்ச்சி இருக்காது. அறிவே ஆற்றல் ஆகும்.

உலகத்தில் நிறைய அழகான விஷயங்கள் உள்ளன. அவை அத்தனையையும் உணரக்கூடிய மனிதர்கள் தான் முழுமை பெற்ற மனிதர்கள். நாம் இந்த உலகத்தை பாதுகாக்கக்கூடியவர்களாக, சாதி, மத பாகுபாடுகளில் இருந்து வெளியே வந்து அனைத்து மக்களையும் நேசிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி தெரிவித்ததாவது:

மாதிரிப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து



விட்டு உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் அடுத்த என்ன படிக்க வேண்டும் என்று சிந்திக்க வைக்க வேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும் என்றுதான் இங்கு அதிகாரிகள் வந்துள்ளனர். அடுத்து என்ன படிக்க வேண்டும் என்பதை இப்போது இருந்தே யோசிக்க வேண்டும். படிப்பு, விளையாட்டு என அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்க முயற்சி எடுக்க வேண்டும். நீங்கள் படிப்பதை மனப்பாடம் செய்யாமல் புரிந்து படிக்க வேண்டும்.

நமது எதிர்காலத்தில் சாதிப்பதற்கான திறமை கிடைக்கும். நூலகம் சென்று படிக்கும்போது எழுதும் திறமை வரும். பேசும், எழுதும் திறமையை வளர்க்க நூலகம் செல்ல வேண்டும். இங்குள்ள அத்தனை வசதியையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்குப் பிடித்த பாடத்தை படிக்க வேண்டும். எதிர்காலத்தில் சாதனையாளர்களாக வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கனிமொழி கருணாநிதி அவர்கள் புதுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான புதிய அல்ட்ரா சோனோகிராம் சேவையினை துவக்கி வைத்தார். பின்னர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ், வைட்டமின் மாத்திரைகள், ஓ.ஆர்.எஸ். கரைசல் ஆகியவற்றை வழங்கினார்.

முன்னதாக இந்தியாவில் முதல் இடத்தை பிடித்த மூக்குப்பீறி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட சான்றிதழை கனிமொழி கருணாநிதி அவர்கள் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பொற்செல்வனிடம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ. ஜெகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர். லோக.பாலாஜி சரவணன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. இரா. ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ரெஜினி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனங்கள் குவிகின்றன!

# சி.பி.எஸ்.இ. பணியாளர்களுக்கான தேர்வில் இந்தித் திணிப்பு!

## இந்தி பேசாத மாநிலங்களுக்கு மீண்டும் அநீதி!

புதுடெல்லி, ஜுலை 8-

சி.பி.எஸ்.இ. என குறிப்பிடப்படும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தில் காலியாக உள்ள 118 பணியிடங்களுக்கு அடுத்த மாதம் தேர்வுகள் நடைபெறுகின்றன.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், இந்தி பேசாத மாநிலங்களுக்கு மீண்டும் அநீதி இழைக்கும் வகையில் சி.பி.எஸ்.இ. பணியாளர்களுக்கான நியமனத் தேர்வில் இந்தி மொழிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதனால், இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த பெரும்பாலான தேர்வர்கள் முதற்கட்டத் தேர்விலேயே தங்கள் வாய்ப்பை பறிகொடுக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தில் ‘ஏ’ பிரிவு பதவிகளுக்கான முதற்கட்ட தேர்வில் மொத்தமுள்ள 300 மதிப்பெண்களில் இந்தி மொழித் தேர்வுக்கு 30 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.

‘பி’ பிரிவில் இளநிலைப் பொறியாளர் பதவிக்கான தேர்வில் இந்தி மொழித் தேர்வுக்கு 15 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.

இளநிலை மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான தேர்வில் மொத்தமுள்ள 300 மதிப்பெண்களில் இந்தி மற்றும் ஆங்கில மொழித்தேர்வுக்கு 200 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல், ‘சி’ பிரிவில் கணக்காளர் பதவிக்கான தேர்வில் இந்தி மற்றும் ஆங்கில மொழித் தேர்வுக்கு 40 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இளநிலை கணக்காளர் பதவிக்கான தேர்வில் மொத்தமுள்ள 240 மதிப்பெண்களில் இந்தி, ஆங்கிலம் மற்றும் இலக்கியம் தொடர்பான வினாக்களுக்கு 40 மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. சி.பி.எஸ்.இ. நிர்வாகத்தின் இந்த தேர்வு முறைக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கடும் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.




நேற்று (07.07.2024) சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் கொள்ளு பெயர்த்தி டாக்டர். நிர்மலா அருள் பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.